பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

23 03 2026 MONDAY 6 30 PM

<u>வணக்கம் - மாநிலச் செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான, தேசிய ஜனநாயக கூட்டணியில் பிஜேபிக்கு 27 தொகுதிகளும், பாமகவிற்கு 18 தொகுதிகளும், அமமுகவிற்கு 11 தொகுதிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.

2. உயர்கல்வித் துறையின் வளர்ச்சிக்காக எண்ணற்ற திட்டங்களை திமுக அரசு செயல்படுத்தியுள்ளதாக அக்கட்சி கூறியுள்ளது.

3. தமிழகத்தில் மக்கள், ஆட்சி மாற்றத்தை விரும்பவதாக பிஜேபி தெரிவித்துள்ளது.

4. சட்டப்பேரவை தேர்தலில், திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வெற்றிபெறும் என்று காங்கிரஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

5. ஆசிய கோப்பை வில்வித்தைப் போட்டியில் இந்தியாவின் Raj Kaur காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளுக்கு இடையேயான தொகுதிப் பங்கீடு இன்று இறுதி செய்யப்பட்டது.

சென்னையில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த அக்கூட்டணிக்கு தலைமை வகிக்கும் அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி, இந்தக் கூட்டணியில் பிஜேபி-க்கு 27 தொகுதிகளும், பாமகவிற்கு 18 தொகுதிகளும், அமமுக-விற்கு 11 தொகுதிகளும் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கூட்டணியில் இடம்பெற்றுள்ள இதர கட்சிகளுக்கான தொகுதி பங்கீடு இன்றிரவுக்குள் இறுதி செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

தங்கள் கூட்டணியில் எவ்வித கருத்து வேறுபாடுகளும் இல்லை என்றும், திமுக தலைமையிலான கூட்டணியில் தான் கருத்து வேறுபாடுகள் நிலவுவதாகவும் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

முன்னதாக, சட்டப்பேரவை தேர்தலுக்கான பிஜேபி பொறுப்பாளர் திரு. பியூஷ் கோயல், பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ், அமமுக பொதுச்செயலாளர் திரு. டி.டி.வி. தினகரன் மற்றும் இதர கூட்டணி கட்சி தலைவர்கள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

**>>>>><<<<<**

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி மிகப் பெரிய அளவில் வெற்றிபெறும் என்று பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், திமுக அரசின் நிர்வாக தோல்வி காரணமாக தமிழகத்தின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

மக்கள் ஆட்சி மாற்றத்தை விரும்புவதாகவும் திரு. பியூஷ் கோயல் தெரிவித்தார்.

>>>>><<<<<

உயர்கல்வித் துறையின் வளர்ச்சிக்காக எண்ணற்ற திட்டங்களை திமுக அரசு செயல்படுத்தியுள்ளதாக அக்கட்சி தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், தமிழ்ப்புதல்வன் போன்ற திட்டங்கள், லட்சக்கணக்கானோரின் உயர்கல்விக்கு ஊன்றுகோலாக அமைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

தமிழக சட்டப்பேரவை தேர்தலில், திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வெற்றிபெறும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. செல்வப்பெருந்தகை நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்திற்கு உரிய நிதியை மத்திய அரசு வழங்கவில்லை என்று குறை கூறினார்.

>>>>><<<<<

நல்லாட்சி வழங்கப்படும் என்பதை மையக்கருத்தாக கொண்டு நாம் தமிழர் கட்சி, தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடும் என்று அதன் ஒருங்கிணைப்பாளர் திரு. சீமான் கூறியுள்ளார்.

இன்று திருத்தணியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இலவச திட்டங்கள் மூலம் வாக்குகளை பெற இதர கட்சிகள் முயற்சிப்பதாக குற்றம் சாட்டினார்.

இலவசம் என்பது ஏமாற்று வேலை என்றும் திரு. சீமான் தெரிவித்தார்.

>>>>><<<<<

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

மாநிலம் முழுவதும் உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்படும் பணம் மற்றும் பரிசு பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு வருவதாக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இதுவரை, 151 கோடியே 93 லட்சம் ரூபாய் மதிப்பிலான பணம்

மற்றும் பரிசுப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இதில், ரொக்கப்பணம் மட்டும் 30 கோடி ரூபாய் அளவிற்கு பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

92 கோடி ரூபாய் மதிப்பிலான நகைகளும் இதில் அடங்கும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

வாக்காளர்களின் வசதிக்காக பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

வாக்காளரின் வரிசை எண், பாகம் எண் ஆகியவற்றை எளிதாக அறிந்து கொள்ளும் வகையில், வாக்காளர் சீட்டு வடிவமைப்பு மாற்றியமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் தொடர்பான அனைத்து விவரங்களையும் அறிந்துகொள்வதற்கு ஏதுவாக ECINET என்ற கைபேசி செயலியும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் ஆணையத்தின் 40-க்கும் மேற்பட்ட செயலிகள் மற்றும் இணையதளங்களை ஒருங்கிணைத்து. இந்த கைபேசி செயலி கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், திருத்தங்களை மேற்கொள்ளுதல், வாக்குப்பதிவு சதவீத விவரங்களை அறிந்து கொள்ளுதல் போன்ற வசதிகள் இதில் இடம்பெற்றுள்ளதாகவும் திருமதி அர்ச்சனா பட்நாயக் அந்த செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், விவசாயிகளுக்கான பயிர்க்கடன் உரிய நேரத்தில் வழங்குவது உறுதி செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

மானிய விலையில் உரங்கள் வழங்கப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>>><<<<<

நாடுமுழுவதும் பெட்ரோலிய பொருட்களின் விநியோகம் சீராக உள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பெட்ரோலியத்துறை இணைச்செயலர் திருமதி. சுஜாதா சர்மா, சமையல் எரிவாயு உற்பத்தி முழுவீச்சில் நடைபெற்று வருவதாக கூறினார்.

மாநிலங்களுக்கு, வணிக பயன்பாட்டிற்கான சமையல் எரிவாயு ஒதுக்கீடு 50 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சமையல் எரிவாயுவை பதுக்குவதை தடுப்பதற்காக சோதனைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இதுவரை 37 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சோதனைகள் நடைபெற்றுள்ளதாகவும், 150 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பெட்ரோலிய பொருட்களின் விநியோகம் சீராக உள்ளதை உறுதி செய்வதற்காக எண்ணெய் நிறுவனங்கள் தொடர்ந்து ஆய்வுகளை மேற்கொண்டு வருவதாகவும் திருமதி. சுஜாதா சர்மா கூறினார்.

>>>>><<<<<

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளத்தில் காவல்துறை விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட இருவர் உயிரிழந்த சம்பவத்தில், காவல்துறையைச் சேர்ந்த 9 பேர் குற்றவாளிகள் என்று மதுரை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இவ்வழக்கினை விசாரணை செய்த மாவட்ட கூடுதல் அமர்வு நீதிபதி திரு. ஜி. முத்துக்குமரன் இன்று இந்த தீர்ப்பினை வழங்கினார்.

குற்றவாளிகளுக்கான தண்டனை வரும் 30ஆம் தேதி அறிவிக்கப்படும் என்றும் நீதிபதி தெரிவித்தார்.

>>>>><<<<<

நீலகிரி, கோவை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில இடங்களில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - வி.ஆர்.துரை 26 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

திருவள்ளூர் மாவட்டத்தில் கூட்டுறவுத்துறை சார்பில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

>>>>><<<<<

விழுப்புரம் மாவட்டத்தில் தேர்தல் விழிப்புணர்வு பிரச்சார பேருந்தின் சேவையை ஆட்சியர் திரு.ஷேக் அப்துல் ரஹ்மான் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

வேலூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் மற்றும் மகளிர் சுயஉதவி குழுவினர் பங்கேற்ற தேர்தல் விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

>>>>><<<<<

திருச்சி மாவட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை சட்டப்பேரவை தொகுதிகளுக்கு பிரித்து அனுப்பும் பணியினை ஆட்சியர் திரு. சரவணன் இன்று ஆய்வு செய்தார்.

>>>>><<<<<

தென்காசி மாவட்டத்தில் அனைவரும் வாக்களிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் கையெழுத்து இயக்கத்தை ஆட்சியர் திரு. கமல் கிஷோர் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

பெரம்பலூர் மாவட்டத்தில் வாக்காளர் விழிப்புணர்வு கலைநிகழ்ச்சியை ஆட்சியர் திருமதி. Mirunalini இன்று தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய கோப்பை வில்வித்தைப் போட்டியில் இந்தியாவின் Raj Kaur காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

பாங்காக்கில் நடைபெற்று வரும் இப்போட்டியின், தகுதிச் சுற்றில் பெற்ற கூடுதல் புள்ளிகள் அடிப்படையில் அவர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றார்.

Chikitha, Swati, Tejal-ம் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

மகளிர் மற்றும் கலப்பு குழுவிலும் இந்தியா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

>>>>><<<<<

ஐசிசி-யின் கடந்த மாதத்திற்கான சிறந்த ஆட்டக்காரர் விருது, மகளிர் பிரிவில் இந்தியாவின் Arundhati Reddy-க்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டித் தொடரில் சிறப்பாக ஆடியதை அடுத்து, அவருக்கு இந்த விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

ஆசிய குழு ஸ்குவாஷ் சாம்பியன் போட்டி ஒத்தி வைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்லாமாபாதில் அடுத்த மாதம் 14ஆம் தேதி தொடங்கி. 18ஆம் தேதிவரை நடைபெறவிருந்த போட்டி, வளைகுடா நாடுகளில் நிலவும் சூழ்நிலை காரணமாக ஒத்தி வைக்கப்படுவதாக ஆசிய ஸ்குவாஷ் சம்மேளனம் கூறியுள்ளது.

>>>>>END<<<<<